RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.54392/ijmrd223S122

# Changes in Education in the Contemporary Environment

## சமகாலச் சூழலில் வாழ்வில் கல்வி நிகழ்ந்த மாற்றங்கள்

**R. Nagendran** [a,*]

[a] Department of Tamil, Govt Arts & Science College, Aruppukottai- 626112, Tamil Nadu, India.

*Corresponding author Email: rrnagendran62@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S122

Received: 13-04-2022; Revised: 17-07-2022; Accepted: 23-07-2022; Published: 19-08-2022

**Abstract:** Changes are concerned not only with mankind but also with literature, such as psychology and education. Along with culture, medicine, anthropology, psychology, business, etc., many changes have taken place in the field of education in today's environment. This article is designed to portray that. There is a huge difference between education in ancient times and education in modern times. Grammar and literature exemplify the education system of that time. The situation of the students who have learned education by giving necessary help to the teachers and giving many materials is now that of learning online. This article is meant to show that. Apart from the topics of introduction and conclusion, fields and changes, education in each era, Tamil grammar and education, literature and education, today's education and change, time change, and internet, this article is based on the advantages and disadvantages that may arise from them.

**Keywords:** Education, Contemporary Environment, Mordern Education, Online Learning

**Language:** **Tamil**

## முன்னுரை

உலகம் தோன்றிய நாள் முதலே எண்ணற்ற நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. பல வகையான உயிரினங்கள் நம்முடைய பூமியல் தோன்றியதோடு மட்டுமல்லாமல் மனித உயிரினமும் தம்முடைய இயல்வான தோற்றத்தினை உறுதி செய்துள்ளது. மனித இனம் காலப் போக்கில் பல விதமான மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. மனிதனின் தோற்றம், அறிவு, செயல்பாடுகள், நடவடிக்கைகள், பண்பாடு முதலானவைகளும் இவற்றில் அடங்கும். அத்தகைய மாற்றங்கள் மனிதனின் வாழ்வியலோடு தொடர்புடையவனாக உள்ளன. மாற்றங்கள் என்பது மனித குலத்தோடு மட்டுமல்லாமல் இலக்கியங்கள், உளவியல், கல்வி முதலானவைகளோடு சம்பந்தப்பட்டவைகளாக அமைந்து உள்ளன. பல்வேறான காலச் சூழலில் மாற்றங்கள் குறித்து பேசுவதும், எழுதுவதும், விவாதிப்பதும் தற்போதுள்ள சூழலில் அவசியமான ஒன்றாகும். கல்வி, பண்பாடு, மருத்துவம், மானுடவியல், உளவியல், வணிகம், தகவல்தொடர்பு போன்ற பல துறைகளில் அன்று முதல் இன்று வரை பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதனடிப்படையில் அனைவருடைய தேவைகளில் ஒன்றான கல்வியிலும் பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே கல்வியல் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

## துறைகளும் மாற்றங்களும்

உலகில் காணப்படுகின்ற பல நாடுகளின் வளர்ச்சிக்கு கல்வி, மருத்துவம் முதலான துறைகள் உறுதுணையாக இருக்கின்றன அதே வேளையில் மேற்கண்ட துறைகளில் ஏற்பட்டுள்ள அல்லது ஏற்படுகின்ற மாற்றங்கள் உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சிக்கு பயன்பட்டோ அல்லது பயன்படாமலோ உள்ளன. உதாரணமாக தகவல் தொடர்பு துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால் பலவிதமான நன்மைகளும், தீமைகளும் அந்தந்த காலச் சூழலில் ஏற்பட்ட வண்ணம் உள்ளன.

மருத்துவத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் எண்ணற்ற நன்மைகளுக்கு வித்திட்டாலும் அவற்றில் சில தீமைகளும் ஏற்படுகின்றன. அதே போன்று மனிதனின் வளர்ச்சிக்கு பங்காற்றுகின்ற கல்வி துறையிலும் இன்றைய சூழலில் பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கல்வி இன்றைய கால கட்டத்தில் தனியார் மயமாக்கப்பட்டு விட்டது. எனவே அறிவு சார்ந்த வளர்ச்சி காணப்பட்டாலும் ஏழ்மை, வறுமை போன்றவைகள் இன்னும் நீக்கப்படாதவையாக உள்ளன. குறிப்பாக இந்தியாவில் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன. அதே நேரத்தில் வேலைவாய்ப்பின்மையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை பல மாநிலங்கள் கல்வியில் பின்தங்கிய மாநிலங்களாகவே காணப்படுகின்றன. ஒவ்வோராண்டும் இலட்சக்கணக்கான பட்டதாரிகள் தங்களுக்கான பட்டங்களைப் பெற்ற போதும் அவர்களுக்கான வேலைவாய்ப்பு என்பது கேள்விக்குரியாகவே உள்ளது. கல்வியைப் போலவே மருத்துவம், வணிகம், தொலைதொடர்பு முதலான துறைகள் பல மாற்றங்களைப் பெற்ற போதும் நன்மைகள் நடைபெறுகின்ற அதே வேளையில் சில தீமைகளும் ஏற்படுகின்றன. மருத்துவம், கல்வியைப் போலவே வணிகம் மற்றும் தொலைதொடர்பு போன்ற துறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்ட வண்ணம் உள்ளன. குறிப்பாக பழங்காலத்தில் நடைபெற்ற பண்டமாற்று என்னும் வணிகம் இன்று வளர்ச்சியடைந்த ஒன்றாகவே காணப்படுகிறது. இன்றைய சூழலில் இணையவழியில் வணிகம் மக்களிடையே பிரபலமான ஒன்றாகவே உள்ளது. பிளிப்கார்ட் அமேசான் முதலான நிறுவனங்கள் இணையவழியில் நடைபெறும் வணிக சேவையில் மிகவும் பிரபலமடைந்தவைகளாகக் காணப்படுகின்றன.

## காலந்தோறும் கல்வி

ஒவ்வொரு மனிதனின் அடிப்படைத் தேவைகளாக இருப்பவை உணவு, உடை இருப்பிடம் போன்றவைகள் ஆகும். மேற்குறிப்பிட்டவைகளோடு ஒவ்வொருவருக்கும் தேவையான ஒன்றாகக் கருதப்படுவது கல்வி. சமுதாயத்தின் முக்கிய அங்கங்களாகக் காணப்படுகின்ற ஆண்களும், பெண்களும் கல்வி கற்பதைக் குறிக்கோள்களாக் கொண்டுள்ளனர். ஆண்கள் தங்கள் தேவைகளின் அடிப்படையில் வேலைக்காகவும் சுயசிந்தனைகளை மேம்படுத்தவும் கல்வி பயில்கின்றனர். அதே போன்று பெண்களும் தங்களுடைய வாழ்வியல் மேம்பாட்டுக்காக கல்வி பயில்கின்றனர். கல்வி கற்றுக்கொண்ட அனைவரும் தங்களுடைய வாழ்க்கையின் முன்னேற்றம் என்பதை அடிப்படையாக் கொண்டு சமுதாய முன்னேற்றத்திற்கு வழி வகுக்கின்றனர் என்றே கூறலாம். அதோடு பெண்கள் கல்வி கற்பதினால் ஒரு சமுதாயமே முன்னேற்றமடைகிறது என காலங்காலமாகக் கூறப்படுகிறது.

அனைவரின் வாழ்விலும் பயன்படக் கூடிய இக்கல்வியானது பல சிந்தனைகளைக் கொண்டதாகவே உள்ளது. உலகின் பல மொழிகளில் காணப்படுகின்ற இலக்கியங்களில் கல்வி குறித்த சிந்தனைகள் காணப்படுகின்றன. குறிப்பாக நம் தமிழ் மொழியின் சிறப்பான இலக்கியங்களாகக் கருதப்படும் திருக்குறள், நாலடியார், புறநானூறு முதலானவைகளில் கல்வி பற்றிய சிந்தனைகள் உள்ளன. அத்தகைய கல்வி குறித்த சிந்தனைகளும் செயல்பாடுகளும் காலப்போக்கில் பலவிதமான மாற்றங்களைச் சந்தித்து வருகின்றது.

## தமிழ் இலக்கணங்களும் கல்வியும்

கல்வியின் முக்கியத்துவத்தினை தமிழ் மொழியில் காணப்படுகின்ற பல இலக்கணங்களும் இலக்கியங்களும் எடுத்துக்காட்டுகின்றன. கல்வியோடு சம்பந்தப்பட்ட கற்றல் மற்றும் கற்பித்தல் போன்ற நடவடிக்கைகளை இலக்கண இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. தொல்காப்பியம் நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் கற்றல் குறித்தும், கற்பித்தல் குறித்தும் பல்வேறு செய்தகளை எடுத்துரைக்கிறது. குறிப்பாக தமிழ் இலக்கியத்தின் முதல் நூலாகக் கருதப்படும் தொல்காப்பியம், கற்பதற்காக ஆண்கள் பிரிந்து சென்றனர் என்று கூறுகிறது. இதற்கு பெயராக ஓதற்பிரிவு என்பதாகக் குறிக்கப்படுகின்றது.

'ஓதல் பகையே தூது இவை பிரிவே' (Manikkavasagan, 2006)

ஏன்ற தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையில் அந்த நூலிற்கு உரை எழுதிய உரையாசிரியர்கள்,

'கல்வி பெறுவதற்காக மேற்கொள்ளும் பிரிவே ஓதற் பிரிவு' என்று கூறுகின்றனர்.

மேலும்,

'வேண்டிய கல்வியாண்டு மூன்று இறவாது' (Manikkavasagan, 2006)

என்ற தொல்காப்பிய நூற்பா கல்வியின் கால எல்லையை உணர்த்துகிறது. எனவே கல்வியைக் கற்பதற்கான கால எல்லை மூன்று ஆண்டுகளாக இருந்திருக்கும் என்று அறிந்து கொள்ள முடிகின்றது.

தொல்காப்பிய நூலுக்கு அடுத்தபடியாக தோன்றிய நன்னூல் என்னும் இலக்கண நூல் கற்பித்தலைப் பற்றியும், கற்கும் முறைகளைப் பற்றியும் குறிப்பிடுகிறது. அதோடு மட்டுமல்லாமல் ஆசிரியரின் இலக்கணம், மாணவரின் இலக்கணம் பாடத்தை எவ்வாறு கேட்பது கற்பது முதலானவற்றையும் குறிப்பிடுகின்றது.

'நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்

உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்

அமைபவன் நூலுரை ஆசிரியன்னே' (Eswaran, 2010)

மேற்கண்ட நூற்பாவின் மூலம் ஒரு ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம். நிலம், மலை, நிறைகோல, மலர் போன்றவற்றின் பண்புகளை ஒரு ஆசிரியர் பெற்றிருக்க வேண்டும் என்பதை மேற்கண்ட நூற்பா நமக்கு தெளிவுபடுத்துகின்றது. மேலும் மாணவர்களை முதல், இடை, கடை மாணவர்கள் என்று குறிப்பிடுகின்றது.

'கோடன் மரபே கூறும் காலைப்

பொழுதோடு சென்று வழிபடல் முனியான்

குணத்தோடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து

இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்

பருகுவன் அன்ன ஆர்வத்தனாகிச்

சித்தரப் பாவையின் அத்தக வடங்கிச்

செவி வாயாக நெஞ்சு களனாகக்

கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்

போவெனப் போதல் என்மனார் புலவர்' (Eswaran, 2010)

மேற்கண்ட நூற்பா ஒரு மாணவன் எவ்வாறு பாடம் கேட்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றது. மாணவன் தாகம் கொண்டவன் தண்ணீரை ஆவலோடு பருகுவதைப் போன்ற ஆர்வமிக்கவனாய், பாடம் கேட்கும் போது ஓவியப் பாவை போலச் சிறிதும் அசையாமல் அடங்கிக் கேட்டு, செவி வாயாக அமைய மனம் கொள்ளும் இடமாக, முன் கேட்டவற்றை மீண்டும் கேட்டு அவற்றை மறக்காமல் உள்ளத்ளதில் நிறைத்து அவன் போ என்று சொன்ன பின்னர்ப் போக வேண்டும். என்ற விளக்கத்தை மேற்கண்ட நூற்பாவின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## இலக்கியங்களும் கல்வியும்

சங்க இலக்கியம் தொடங்கி ஒவ்வொரு காலகட்டத்திலும் தோன்றிய இலக்கியங்களில் கல்வி பற்றிய சிந்தனைகள் காணப்படுகின்றன. சங்க கால இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றின்,

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' (Gurunathan, 2003)

ஏன்னும் வரிகளில் ஆசிரியருக்குகத் தேவையான உதவிகளைச் செய்தும் பொருள்களைக் கொடுத்தும் கற்க வேண்டும் என்பதைக் கூறுகின்றது.

மேலும்,

‘கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே’ (Gurunathan, 2003)

என்று குறிப்பிடுகின்றது. சமுதாயத்தில் உயர்வு தாழ்வு என்பது காணப்படுகின்றது. அதோடு சாதி வேற்றுமைகளும் உள்ள சமுதாயத்தில் ஒருவன் தாழ்ந்த நிலையில் இருந்தாலும், அவன் கல்வி கற்றவனாக இருந்தால் அவனுடைய கருத்து ஏற்றுக் கொள்ளப்படும் என்ற கருத்தை மேற்கண்ட வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

சங்கமருவிய கால இலக்கியங்களான திருக்குறள் நாலடியார் முதலான நூல்களில் கல்வி பற்றிய சிறப்பான செய்திகள் காணப்படுகின்றன. திருக்குறனை எழுதியுள்ள திருவள்ளுவர் கல்வியின் அவசியத்தை உணர்ந்து ‘கல்வி’ என்னும் அதிகாரத்தையும் கல்வி கற்கவில்லை என்றால் என்பதை உணர்த்த ‘கல்லாமை’ என்ற அதிகாரத்தையும் அமைத்திருக்கிறார்.

‘கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக’ (Manikkavasagan, 2018)

என்னும் குறளில் கல்வி கற்கின்ற முறைமையினையும் கற்றதற்குப்பின் அதன்படி நடக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

‘எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு’ (Manikkavasagan, 2018)

உயிர் வாழ்க்கைக்கு கண்கள் மிக முக்கியம் ஆகும். அது போன்றே எண்ணும் எழுத்தையும் கல்லாமல் வாழ்கின்ற வாழ்க்கையானது உடலில் கண்ணிரண்டில்லை என்றால் உலகம் எவ்வாறு இருட்டாகத் தோன்றுமோ அது போன்றே கல்வி அறிவைப் பெறாதவர் வாழ்க்கையும் இருள் நிரம்பித் தோன்றும். எனவே கண்ணாணது உடலுக்கும் உடல் இயக்கத்துக்கும் அவசியமாவதைப் போலவே கல்வியும் அவசியம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

திருக்குறளுக்கு அடுத்தபடியாக நாலடியார் என்னும் நூல் கல்வி தான் அழகு என்னும் கருத்தினைக் கீழ்க்கண்ட பாடல் மூலம் எடுத்துக் காட்டுகின்றது.

‘குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்

மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து

நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையால்

கல்வி அழகே அழகு’ (Manikkavasagan, 1993)

## இன்றைய மாற்றமும் கல்வியும்

மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் திண்ணைப்பள்ளிக் கூடத்தில் பயின்றனர். ஆசிரியர்களுக்குத் தேயான உதவிகளைச் செய்தும், அவர்களுக்குரிய பொருள்களைக் கொடுத்தும் தங்களுக்குரிய கல்வியினைக் கற்றனர். ஆனால் இன்றைய கால கட்டத்தில் கல்வியில் பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்றைய மாணவர்கள் தங்களுக்கென்று பல விதமான துறைகளைத் தேர்வு செய்கின்றனர். இலக்கியம், வரலாறு அறிவியல, கணிதம், சமூகவியல் முதலான பல்வேறு துறைகளைத் தேர்வு செய்கின்றனர். ஒரு காலத்தில் ஏட்டுக் கல்வியாக இருந்த கல்வி இன்றைய கால கட்டத்தில் பெரும்பாலான மாற்றங்களைப் பெற்றுள்ளது. இளங்கலை, இளம்அறிவியல், பொறியியல், வணிகம் போன்ற படிப்புகள் மாணவரிடையே மிகவும் பிரபலமாக உள்ளன. ஆனால் அதே சமயத்தில் படிப்புகளுக்கேற்ற வேலைவாய்ப்பு என்பதும் சரியான முறையில் அமையவில்லை.

இன்றைய கால கட்டம் மிகவும் மோசமான கால கட்டமாக உள்ளது. குறிப்பாக 'கொரானா' என்னும் பெருந்தொற்று உலகையே மிகவும் அச்சுறுத்தி வருகிறது. இந்நோயினால் உலகம் முழுவதும் பெரும்பான்மையான மக்கள பாதிப்படைந்து உள்ளனர். குறிப்பாக மாணவர்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். அவர்களுக்கான கல்வி முறையும் மாற்றமடைந்து வருகிறது. இணையவழியில் மாணவர்கள் உலகம் முழுவதும் கற்றுக் கொண்டு வருகின்றனர். இம்முறையில் வகுப்புகளும் தேர்வகளும் நடைபெற்று வருகின்றன. அனைத்து தரப்பினருக்கும் இந்த இணையவழி முறையானது புதிய உத்வேகத்தையும் நம்பிக்கையையம் கொடுத்துள்ளது. அதே சமயத்தில் சில சங்கடங்களையும் கொடுத்திருக்கின்றது என்பதில் மாற்று கருத்து இல்லை. மாணவர்கள் அச்சடிக்கப்பட்ட புத்தகங்களைப் படிப்பதை விட இன்றைய கால கட்டத்தில் இணையதளங்களில் கிடைக்கும் மின் வடிவிலான புத்தகங்களைப் பயில்கின்றனர்

## கால மாற்றமும் இணையமும்

உலகில் யாருமே எதிர்பார்க்காத இந்த கொரோனா பெருந்தொற்று அனைவருடைய வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுவிட்டது என்றே கூறலாம். கல்வியல் எண்ணற்ற மாற்றங்கள் காணப்பட்டாலும் இப்படிப்பட்ட சூழலில் மாணவர்கள் இணையவழியில் கற்றுக்கொண்டு வருகின்றனர்.

1. கூகுள் மீட் (Googlemeet)
2. ஜீம் (Zoom)
3. வெப் மேக்ஸ் (WebMax)
4. வலையொளி (Youtube)
5. கூகுள் வகுப்பறை (Google Classroom)

முதலான எண்ணற்ற செயலிகள் (APPs) மூலம் மாணவர்கள் கல்வியினைக் கற்கின்றனர். இக்கல்வி முறையானது மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருப்பதுடன், தாங்கள் இருக்கின்ற இடத்திலிருந்தே கல்வியினைக் கற்பதற்கு வசதியாகவும் இம்முறை அமைந்துள்ளது. மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கும் இந்த இணையவழியில் கற்பிக்கக்கூடிய இம்முறையானது மிகவும் பயனள்ளதாகவே அமைந்துள்ளது.

## நன்மைகள்

- மாணவர்கள் எங்கிருந்தாலும் எந்த நேரத்திலும் இணையவழி வகுப்பில் கலந்து கொள்ள முடியும்.
- தங்களுடைய திறன்பேசி, மடிக்கணினி போன்ற சாதனங்கள் மூலம் கல்வி கற்கலாம்.
- கொரோனா போன்ற பெருந்தொற்று காலங்களில் மாணவர்களுக்கு எந்த விதமான பாதிப்பு ஏற்படாமல் இருக்க இம்முறை உதவுகிறது.
- அச்சடிக்கப்பட்ட புத்தகங்களைக் காட்டிலும் இணையத்தில் கிடைக்கக் கூடிய மின்னணு நூல்கள் மிகவும் பயனள்ளவையாக அமைகின்றது.
- பள்ளிகளுக்கோ அல்லது கல்லூரிகளுக்கோ செல்லாமல் வீட்டில் இருந்தபடியே தங்களுடைய தேர்வுகளை இணையவழியில் எழுதிக் கொள்ள உதவுகிறது

## தீமைகள்

- இந்த இணையவழிக் கல்வி முறையானது அனைத்து தரப்பினருக்கும் பயன்படுகின்ற அதே வேளையில் அனைவருக்கும் கிடைப்பது என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.
- மாணவர்கள் இணையவழி வகுப்புகளில் கலந்து கொள்வதற்கு தங்களுடைய திறன்பேசியில் தேவையான அளவு டேட்டா (DATA) என்பதைப் பெற்றிருக்க வேண்டும்

- மாணவர்கள் தங்களுடைய இணைய வழி வகுப்புகளக்காகவும்; இணையவழித் தேர்வுகளுக்காகவும் நீண்ட நேரம் திறன்பேசி மற்றும் மடிக்கணிணி போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டிய சூழல் ஏற்படலாம். அதன் காரணமாக மாணவர்களின் உடல் நிலையில் பிரச்சனைகள் ஏற்படலாம்.
- ஆசியர்களிடம் நேரடியாகப் பெறக்கூடிய பாட அறிவுக்கும் இணையவழியில் பெறக்கூடிய பாட அறிவுக்கும் வேறுபாடுகள் உள்ளன. மேலும் மாணவர்கள் இணையவழியில் பாடங்களைத்தான் கற்கின்றார்களா என்பதற்கு எந்த வித உத்தரவாதமும் இல்லை

## முடிவுரை

இன்றைய சமகாலச் சூழலில் கல்வியில் பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளன. அதனை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் மாணவர்கள் இல்லை என்பது தான் நிதர்சனமான உண்மை ஆகும். அதே வேளையில் இயற்கை பேரிடர் காலத்தில் இத்தகைய சூழலை எதிர் கொள்ள வேண்டிய நிலையில் மாணவர்கள் உள்ளனர். இணையவழிக் கல்வியைக் கற்க வேண்டிய மாணவர்கள் கடுமையான பொருளாதாரச் சூழலும் ஒத்துழைப்பதாக இல்லை என்பதை தென் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## References

Eswaran, Sa., (2010) Nannool, Paavai Publications, Chennai, India.

Gurunathan, V., (2003) Puranaanooru Moolamum Uraiyum, Vadivel Pathippagam, Thanjavur, India.

Manikkavasagan, G., (1993) Naladiyar, Uma Pathippagam, Chennai, India.

Manikkavasagan, G., (2006) Tholkappiyam, Uma Pathippagam, Chennai, India.

Manikkavasagan, G., (2018) Thirukkural, Uma Pathippagam, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

R. Nagendran, Changes in Education in the Contemporary Environment, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 110-115. DOI: https://doi.org/10.54392/ijmrd223S122